

திருப்பூர் மாநகராட்சி, 4 வது மண்டலம், வார்டு எண் 41, தந்தை பெரியார் நகரில் 15 வது மத்திய நிதிக்குழு மானிய திட்டத்தின் கீழ் ரூ.2.86 கோடி மதிப்பீட்டில் புதிய பாலம் மற்றும் ரூ.5.35 கோடி மதிப்பீட்டில் 4,755 புதிய மின்விளக்குகள் பொருத்தும் பணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ் தலைமையில், வடக்கு மாவட்டக் கழக செயலாளர் க.செல்வராஜ் எம்.எல்.ஏ., தெற்கு மாவட்டக் கழக செயலாளர் இல.பத்மநாபன், மாநகராட்சி மேயர், ந.தினேஷ்குமார் முன்னிலையில் அமைச்சர், மு.பெ.சாமிநாதன் துவக்கி வைத்தார். இதில் திருப்பூர் தெற்கு மாநகர கழக செயலாளர் டி.கே.டி.மு.நாகராசன், மாநகராட்சி துணை மேயர் ரா.பாலசுப்பிரமணியன், மண்டலத் தலைவர்கள் சி.கோவிந்தசாமி, தம்பி ஆர்.கோவிந்தராஜ், வெ.உமாமகேஸ்வரி உள்பட மாவட்ட, மாநகர, பகுதி கழக, வட்டக் கழக நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## பூமி, நிலவை புகைப்படங்கள் எடுத்த சந்திரயான்-3 விண்கலம்...!

புதுடெல்லி, ஆக.11-

நிலவின் தென் துருவத்தை ஆய்வு செய்வதற்காக இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) 'சந்திரயான்-3' என்ற விண்கலத்தை, ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி ஆய்வு மையத்தில் இருந்து கடந்த மாதம் 14ந்தேதி விண்ணில் ஏவியது.

வெற்றிகரமாக 23 நாட்கள் பயணத்தை முடித்து கொண்டு, சந்திரயான்-3 விண்கலம் நிலவு சுற்றுப்பாதையில் நுழைந்தது. தற்போது நிலவின் சுற்று வட்டப் பாதையில் பயணித்து வருகிறது. தற்போது 174 கி.மீ., அதிகபட்சம் 1,437 கி.மீ. தொலைவு கொண்ட நிலவு வட்ட சுற்றுப்பாதையில் விண்கலம் வலம் வருகிறது.

இந்த நிலையில், சந்திரயான்-3 விண்கலம் பூமி மற்றும் நிலவை படம்பிடித்த புதிய புகைப் படங்களை, இஸ்ரோ தற்போது வெளியிட்டுள்ளது. நிலவில் தரை இறங்கக்கூடிய லேண்டரின் அடிப்பகுதியில் உள்ள கிடைமட்ட கேமரா மூலம் எடுக்கப்பட்ட புகைப்படங்களை இஸ்ரோ வெளியிட்டுள்ளது.

# விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழு ஆலோசனைக் கூட்டம்!

## அமைச்சர் செஞ்சிமஸ்தான் அறிக்கை



விழுப்புரம், ஆக.11-

விழுப்புரம் வடக்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் செஞ்சி மஸ்தான் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழு ஆலோசனைக் கூட்டம் மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் ப.சேகர் தலைமையில் 13.08.2023 ஞாயிற்றுக்கிழமை அன்று மாலை 3.00 மணி அளவில் செஞ்சி வள்ளி அண்ணாமலை திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

கூட்டத்திற்கு மாநில, மாவட்ட, நிர்வாகிகள், பொதுக்குழு, செயற்குழு, உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கழக செயலாளர்கள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், மற்றும்உள்ளாட்சி பிரதிநிதிகள் அனைவரும் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:

1.விழுப்புரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள செஞ்சி, மயிலம், திண்டிவனம் ஆகிய மூன்று தொகுதிகளிலும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு சிலை அமைப்பது தொடர்பாக.

2.முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்தநாள் விழாவை முன்னிட்டு அனைத்து ஒன்றிய, நகர, பேரூர் கழகங்களில் 100 நிகழ்ச்சிகளுக்கு குறையாமல் நடத்துவது.

3.விழுப்புரம் வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட அனைத்து ஊராட்சிகளிலும் கழக கொடியை ஏற்றி பள்ளி மாணவர்களுக்கு நோட்டு புத்தகங்கள், விளையாட்டு உபகரணங்கள் மற்றும் நலிவுற்றவர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குவது.

4.மக்கள் முதல்வர் தளபதி அவர்களின் இரண்டு ஆண்டு சாதனைகளை வீடுகள் தோறும் சென்று திண்ணை பிரச்சாரம் செய்வது தொடர்பாக.

5. மக்கள் முதல்வர் தளபதி அவர்களின் அறிவுறுத்தலின்படி அனைத்து ஒன்றிய, நகர, பேரூர், கழகங்களில் தெரு முனை பிரச்சாரம் மற்றும் பொதுக் கூட்டங்கள் நடத்துவது தொடர்பாக.

6.வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டு அனைத்து ஒன்றிய, நகர, பேரூர் ஊராட்சிகளில் பாக முகவர்கள் கூட்டம் நடத்துவது தொடர்பாக.

7விழுப்புரம் வடக்கு மாவட்டத்தைச் சேர்ந்த அனைத்து ஒன்றிய, நகர, பேரூர், கழகங்களில் அதிக அளவில் புதிய உறுப்பினர்கள் சேர்த்தல் தொடர்பாக.

8.விழுப்புரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள மூத்த கழக முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்குதல் தொடர்பாக.

9.கழக ஆக்க பணிகள்.

இவ்வாறு அவர் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

### தனியார் தொலைக்காட்சிகளை இயக்குவதில்

# அந்நிய நேரடி முதலீட்டை ஒன்றிய அரசு அனுமதித்துள்ளதா?

## மக்களவையில் டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி!



புதுடெல்லி, ஆக. 11-

தனியார் தொலைக்காட்சி சேனல்கள் மற்றும் 24/7 புதிய சேனல்களை இயக்குவதில் 75 சதவீதத்துக்கும் அதிகமான அன்னிய நேரடி முதலீட்டை (FDI) ஒன்றிய அரசு அனுமதித்துள்ளதா என்பது குறித்தும், கடந்த ஆறு ஆண்டுகளில் கார்ப்பரேட் நிறுவனங்கள்/கார்ப்பரேட் நிறுவனங்களால் விற்கப்பட்ட, இணைக்கப்பட்ட அல்லது புதிய தொலைக்காட்சி சேனல்கள்/டிவி சேனல்கள் பற்றிய விவரங்கள் குறித்தும் இந்திய பிரஸ் கவுன்சில் சீரமைப்பது குறித்தும் நாடாளுமன்ற மக்களவையில் வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் கதிர் ஆனந்த் யகேள்வி? எழுப்பினார்.

நாட்டில் தனியார் தொலைக்காட்சி சேனல்கள் மற்றும் 24/7 புதிய சேனல்களை இயக்குவதில் 75 சதவீதத்துக்கும் அதிகமான அன்னிய நேரடி முதலீட்டை (FDI) ஒன்றிய அரசு அனுமதித்துள்ளதா? அப்படியானால், அதன் விவரங்கள் யாவை? கடந்த ஆறு ஆண்டுகளில் கார்ப்பரேட் நிறுவனங்கள் / கார்ப்பரேட் நிறுவனங் களால் விற்கப்பட்ட, இணைக்கப்பட்ட அல்லது புதிய தொலைக்காட்சி சேனல்கள்/டிவி சேனல்கள் பற்றிய விவரங்கள் யாவை?

இந்திய பிரஸ் கவுன்சில்? மற்றும் பிராட்காஸ்ட் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா லிமிடெட் நிறுவனத்தை சீரமைக்க ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கைகள் யாவை?

இதற்கு ஒன்றிய அரசின் தகவல் மற்றும் ஒளிபரப்புத் துறை அமைச்சர்; மற்றும் இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் அனுராக் சிங் தாக்கூர் எழுத்து பூர்வமாக அளித்த பதில் விவரம் வருமாறு

இந்திய ஒன்றிய அரசின் தற்போதைய FDI கொள்கையின் கீழ், செயற்கைக் கோள் செய்தி தொலைக்காட்சி சேனல்களுக்கான FDI வரம்பு 49%, செய்தி அல்லாத தொலைக்காட்சி சேனல்களுக்கு, 100% வரை FDI அனுமதிக்கப்படுகிறது. இந்தியாவில் செயற்கைக் கோள் தொலைக்காட்சி சேனல்களை அப்லிங்க் மற்றும் டவுன்லிங்க் செய்வதற்கான கொள்கை வழிகாட்டுதல்களின் பிரிவு 32, 2022ன்படி, நிறுவனங்கள் சட்டம், 2013, லிமிடெட் லையபிலிட்டி சட்டம், 2008 அல்லது வரையறுக்கப்பட்ட விதிகளின்படி தொலைக்காட்சி சேனல்களின் அனுமதியை வேறு நிறுவனத்திற்கு மாற்றலாம். மேலும் இது கொள்கை வழிகாட்டுதல்களில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

ஒன்றிய அரசின் தகவல் மற்றும் ஒளிபரப்புத் துறை அமைச்சகம் கடந்த ஆறு ஆண்டுகளில் 237 புதிய டிவி சேனல்களுக்கும், நடப்பு ஆண்டில் 2023-24ல் 5 டிவி சேனல்களுக்கும் அனுமதி வழங்கியுள்ளது.

மேலும், கடந்த ஆறு ஆண்டுகளில் அந்தந்த அனுமதிக்கப்பட்ட நிறுவனங்களின் இணைப்பு காரணமாக 28 தொலைக்காட்சி சேனல்களுக்கான அனுமதியும் மாற்றப்பட்டுள்ளது.

இந்திய பிரஸ் கவுன்சில் என்பது பாராளுமன்ற சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட சட்டப்பூர்வ சார்பு நீதித்துறை தன்னாட்சி அதிகாரமாகும். இந்திய பிரஸ் கவுன்சிலில் எந்த மாற்றத்திற்கும் ஒன்றிய அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. பிராட்காஸ்ட் இன்ஜினியரிங் கன்சல்டன்ட் இந்தியா லிமிடெட் (BECIL) என்பது இந்த அமைச்சகத்தின் கீழ் உள்ள ஒரு மினி ரத்னா பொதுத்துறை நிறுவனமாகும், இது திட்ட ஆலோசனை மற்றும் ஆயத்த தயாரிப்பு தீர்வுகளை வழங்குகிறது. BECIL இல் கட்டமைப்பு மாற்றங்கள் எதுவும் இல்லை. இருப்பினும், சமீப காலங்களில், மூலோபாய திட்டங்களின் துறைகளில் பல்வகைப்படுத்தவும், அதன் செயல்முறை கள் மற்றும் நடைமுறைகளை நெறிப்படுத்தவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. 3வது ஊதிய திருத்தத்தின் பலன்கள் அதன் ஊழியர்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு அமைச்சர் தனது பதிலில் கூறினார்.

### கழக துணைப் பொதுச் செயலாளர்

# ஆ.இராசா எம்.பி.யின் அண்ணி இரா.உமாராணி மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி



பெரம்பலூர், ஆக. 11-

பெரம்பலூர் மாவட்டம், வட்டம் வேலூர் கிராமத்தைச் சேர்ந்த பேராசிரியர் முதுமுனைவர் டாக்டர் ஆ.இராமச்சந்திரன் (அரசின் கால நிலை மற்றும் மேலாண்மை குறித்த மேல்நிலை குழு உறுப்பினர்) அவர்களின் மனைவியும், ஆ.சிவசண்முகம், ஆ.கலிய பெருமாள் (இந்து சமய அறங்காவலர் குழுத் தலைவர்) மேனாள் ஒன்றிய அமைச்சர், கழக துணைப் பொதுச் செயலாளர், ஆ.இராசா ஆகியோரின் அண்ணியாரும், இரா.ராம் கணேஷ், முனைவர் இரா. பிரியதர்ஷினி அவர்களின் தாயாருமான திருமதி. இரா.உமாராணி அவர்கள் நேற்று (10.8.2023 வியாழக்கிழமை) நள்ளிரவு 12.15 மணியளவில் மறைவுற்றார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

அம்மையாரின் நல்லடக்கம் நேற்று (10.8.2023 வியாழக்கிழமை) மாலை 4.00 மணியளவில் திருச்சி, திருவானைக்காவல் சிவராம் நகரில் உள்ள அவர்களின் இல்லத்தில் இருந்து புறப்பட்டு நடைபெற்றது.

### முத்தமிழறிஞர் கலைஞர் 5 ஆம் ஆண்டு நினைவு நாள்!

# குன்றத்தூர் நகரத்தில் கலைஞர் திருவுருவப் படத்திற்கு மரியாதை!

## கோ.சத்தியமூர்த்தி தலைமையில் உணவு வழங்கல்!

காஞ்சிபுரம், ஆக.11-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 5 ஆம் ஆண்டு நினைவு நாளான ஆக.7 அன்று குன்றத்தூர் நகரக் கழகம் சார்பில் முத்தமிழ றிஞர் கலைஞர் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது.

நகரச் செயலாளர் கோ. சத்தியமூர்த்தி தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பொதுமக்களுக்கு உணவு வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் குன்றத்தூர் நகரக் கழக நிர்வாகிகள், வார்டுக் கழகச் செயலாளர்கள், இளைஞர் அணி, மகளிர் அணி, மாணவர் அணி உள்ளிட்ட அனைத்து அணிகளின் நிர்வாகிகள், கழக செயல்வீரர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



உலகப் பழங்குடியினர் தினத்தை முன்னிட்டு நீலகிரி மாவட்டத்தில் உள்ள முத்தாடு மந்து என்ற இடத்தில் தோடர் இன மக்களைச் சந்தித்து அவர்களின் பழக்கவழக்கங்கள், சடங்குகள், பண்பாடு மற்றும் கலாச்சார முறைகளை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் கேட்டறிந்தார். மேலும் அவர்களின் குடியிருப்பு பகுதிகளுக்குச் சென்று பார்வையிட்டார்.

# 172 அ வட்டத்தில் 500 பேருக்கு உணவு

## எஸ்ஆர்.செந்தில் தலைமையில் வழங்கினர்

சென்னை, ஆக.11 -

முத்தமிழறிஞர் தமிழின தலைவர் அவர்களுடைய ஐந்தாம் ஆண்டு நினைவு நாளான 7-8.2023 அன்று சென்னை தெற்கு மாவட்டம் சைதை கிழக்கு பகுதி 172 அ வட்டத்தில் மாவட்டச் செயலாளர் - அமைச்சர் மா.சுப்பிரமணியன், பகுதிச் செயாளரும் மண்டலக் குழுத் தலைவருமான இரா. துரைராஜ் ஆகியோரது ஆலோசனைப்படி, சாத்தானிபேட்டை 500 பேருக்கு மற்றும் நேரு நகர் 2வது மெயின் ரோட்டில் 300 பேருக்கு இரண்டு பாகத்தில் தாகோ வெங்கடேசன், எம் நாராயணமூர்த்தி ஆகியோரது தலைமையில் மாவட்ட பிரதிநிதிகள் ஜி செல்வராஜ், வி.ரமேஷ் குமார் ஆகியோர் முன்னிலையில் வட்டச் செயலாளர் எஸ். ஆர். செந்தில் மதிய உணவு வழங்கினார்.

இதில் பகுதி பிரதிநிதி ஆர் சீனிவாசன், கே கே மோகன், செயற்குழு உறுப்பினர் ரவீந்தர், காமராஜபுரம் ராமர் ராஜ், பவன், பீட்டர், ஜெயவேல், கன்னிகாபுரம் குப்பன், நாராயணன், பூக்கடை வாசு, முனுசாமி, ராஜா ,ஆட்டோ மோகன், டைல்ஸ் மோகன், பெயிண்டர் கிருஷ்ணன், மோகன் ஆனந்த் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# 'நெருப்பாறு நீந்திய சூரியக் குதிரை' ,முரசொலி வாழ்க பல்லாண்டு!

முரசொலி' கலைஞர் மூச்சொலி: கழக வரலாறு தீட்டும் வரிப் புலி'
திராவிட இனத்தின் துடிப்பொலி !
ஈரோட்டுக் கிழவர் மனத்தொலி :
கொட்டுப்பேரிகை எதிரொலி:
காஞ்சிக் கதிரவன் அருந்தவ அண்ணா
வாஞ்சையைப் பெற்ற வாழ்த்தொலி: ஏட்டொலி'!
பாவேந்தர் போற்றிய பாடநூற் கழகம்: படிப்பெறும்புகள் தேடும் பனங்கற் கண்டு;
கலைஞரின் திருமுகம்; தொடுதாள் தொண்டன் நித்தம் பார்க்கும் நிலைக்கண்ணாடி'
மூட நம்பிக்கை முதுகெலும் பொடித்திடும் பட்டறை | ஆம் :பகுத் தறிவுப் பாசறை!
சாதி, மதப்பேய், சான்றிலாத் தெய்வம் வேதியர் வழங்குபொய் வீழ்த்திய விடகாரி" வடவர் வேய்ந்த கொடுமுடி சாய்த்த கடுமா 'மணிமுடி
தமிழர்க்கோ திருநா" பொய்யுரை தகர்க்கும் மெய்யுரை விளக்கு',
நெய்யிலா வெய்யோன்; திரியிலாத் திங்கள்' மையல் கொளத்தகு வையத்துப்பொதியம் :
கலைஞர்கை ஒளிர்வாள்' கவிஞர் ஏறுதோள்" நெருக்கடி நிலையிலும் நெருப்பாறு நீந்திய சூரியக் குதிரை :தமிழர்ச் சேனை:
அரசியல் இலக்கியம் வரலாறு பாடும் புரட்சிக் பூங்குயில்'
கைஅகவும் தாள்மயில் 'கவிதை, கட்டுரை , கடிதப் பரப்புரை;
புவிநிகழ்க் கருத்துரைப் பல்கலைக் கழகம்' கவின்மிகு செந்தேன் ஊறிடும் குளிர்ச்சுனை.
ஆண்டான் ,அடிமை அகற்றும் நீந்துப் பெருகடல் 'கருத்துப் பெட்டகம்; பொத்தகம்:
ஒல்லார் தீச்செயல் பொல்லாக் கெடுவினை நில்லாச் செய்த நீள்கோல்' கூர்வேல்.
ஊறுவது கண்டே உறுமி நாளும் செறுநர் வீழ, செறுகளந் தன்னில் சாதனை படைக்கும் சண்ட மாருதம்'
செங்கை விரிக்கும் பங்கய இதழ்மணம்!
பொங்கு கங்கை புதுப்புனல் சுவை போல் எண்டிசைச் செய்தி ஏந்தித் தந்திடும் தண்டலை முரசொலி'
குற்ற முறைப்பதில் கண்ணகி சிலம்பு'
கருத்துப் பசியாற்றும் நன்மணி மேகலை
'நீதி புகல்வதில் திருக்குறள்'
நிலத்தார் திருந்தவே கலைஞரின்அரும்விரல்' சென்னியைத் திருகிடும் தினமடல்!
அழிக்க வெழுந்த ஆரியம் தோற்றதால் மொழிப்போர்க் கேடயம்'
விழியது இமைஅரண்' பொய்யுரை புதையல்; புலமைச் சுரங்கம்.
முழங்கு சங்கம் முறுவல் புவனம்'
வானும் ,மண்ணும், வளியும் ,ஒளியும், தேனுறை நீரும் வாழ்த்தும்
செய்தியால் விளங்கு மண்டலக் களங்காண் முரசொலி'
களம்பல கண்ட காவிரி நாடனின் கலங்கரை விளக்கம்:
சோழன் மெய்கீர்த்தி' விளங்கு புகழிதழ் முரசொலி
வளம்பல பெருகவே! வாழ்க பல்லாண்டு!



**கவிஞர் தமிழ்தாசன்**
கழகத் தீர்மானக்குழு தலைவர்

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## மயிலை ஆ. சந்திரன்
### ஆகஸ்ட் 11 (1996)



இளவயது முதலே கழகத்தில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்றியவர்.

ஒன்றுபட்ட சென்னை மாவட்டத்தில் பகுதி பிரதிநிதியாகவும் – தென்சென்னை மாவட்டத்தில், வட்டக் கழகச் செயலாளர், மயிலை பகுதிக் கழகச் செயலாளர் ஆகிய பொறுப்புகளை வகித்தவர்.

இந்தி எதிர்ப்பு போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**